இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021-222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 135 இதழ்: 15 பக்கங்கள்: 08 திகதி: 31-07-2011 விலை: 15.00

# "நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு துன்பத்திற்கும் ஒரு பொருள் உண்டு, வாழ்வின் துன்பங்களில் இயேசுவுடன் உடன் இருப்போம்"



## தூய யாகப்பர் ஆலய 150 ஆண்டு நிறைவு விழாவில் திருமலை மட்டுநகர் துணை ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை

கடந்த யூலை 25ம் திகதி குருநகர் தூய யாகப்பர் ஆலய திருவிழாவும் அவ் ஆலயத்தின் 150வது ஆண்டு நிறைவு விழாவும் மிக விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. இத்திருவிழா திருப்பலியிலேயே திருமலை மட்டுநகர் துணை ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை மேற் கண்டவாறு கூறினார். ஆயர் தமது மறையுரையில் தூய யாகப்பர் இயேசுவுடன் உடன் இருந்த அப்போஸ்தலர். இயேசுவினால் அழைக்கப்பட்டவர், முக்கியமான நிகழ்ச்சிகளில் எல்லாம் இயேசுவுடன் உடன் இருந்தவர். இயேசுவின் உறவினரும் கூட வாழ்வின் ஒவ்வொரு துன்பத்திற்கும் பொருள் உண்டு என்று தமது வாழ்வால் எடுத்துக் கூறியவர். எனவே நாம் எமது அன்றாட வாழ்வில் சந்திக்கும் சவால்கள் துன்பங்களில் பொருள் கண்டு இயேசு



வுடன் உடன் இருந்து எதிர் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

மேற்படி ஆலய 150 ஆண்டு விழாவானது கூடிய ஆன்மீக ஆயத்தத்துடன் கொண்டாடப்பட்டமை குறிப்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## திருப்பீடமும் மலேசியாவும் அரசியல் உறவை உருவாக்கியுள்ளன

திருப்பீடமும் மலேசியாவும் தங்களுக்கிடையே நட்புறவை வளர்த்துக் கொள்ளும் ஆவலில் இவ்விரு தரப்பும் அரசியல் உறவை உருவாக்கத் தீர்மானிததுள்ளன என்று இப் புதனன்று அறிவிக்கப்பட்டது.

திருப்பீடத்தைப் பொறுத்தவரை அப்போஸ்தலிக்கத் தூதரகம் என்ற நிலையிலும், மலேசியாவைப் பொறுத்தவரை தூதரகம் என்ற நிலையிலும் இவ்வரசியல் உறவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், மலேசியா, திருப்பீடத்துடன் அரசியல் உறவைக் கொண்டிருக்கும் 179வது நாடாக மாறியுள்ளது.

மலேசியப் பிரதமர் நாஜிவ் றஷாக், இம்மாதம் 18ம் திகதி திருத்தந்தை 16ம் பெனடிக்றரை காஸ்தல் கந்தோல்.'.போவில் சந்தித்துப் பேசியதற்குப் பின்னர் இவ்வறிவிப்பு வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏறக்குறைய 2 கோடியே 83 இலடசத்து 6,700 மக்கள் தொகையைக் கொண்ட மலேசியாவில் 60.4 விகிதம் இஸ்லாமியர். 19.2 விகிதத்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட்டில் இலங்கைக்கு முதல் வெள்ளிப் பதக்கம்

### சென் பற்றிக்ஸ் மாணவன் வென்றார்!

என்பதுக்கு மேற்பட்ட நாடுகள் பங்கு பற்றிய 42வது சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டி தாய்லாந்தில் ஜூலை 10-18 வரை நடைபெற்றது. இதில் சென் பற்றிக்ஸ் கல்லூரி உயர்தர மாணவன் சி. செல்வநித்திலன் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். இதுவே இபபோட்டியில் இலங்கைககுக் கிடைத்த முதலாவது வெள்ளிப் பதக்கமாகும்.




இப்போட்டிக்காக மாணவர்களைத் தெரிவு செய்து பயிற்சி அளித்து அனுப்பும் பணியை, கொழும்புப் பல்கலைக கழக பௌதிகவியல் துறையும் இலங்கை பௌதிகவியல் துறையும் இலங்கை பௌதிகவியல் நிறுவனமும் 2005ஆம் ஆண்டு முதல் இணைந்து செயற்படுத்தி வருகின்றன.

க.பொ.த. (உயர்தர) வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கிடையில் ஆண்டு தோறும் அகில இலங்கை ரீதியாக நடைபெறும் இலங்கை பௌதிகவியல் போட்டிப் பரீட்சையில் அதி உயர் புள்ளிகள் பெற்ற மாணவர்களே ஆசியமட்டப் போட்டிக்கும், பின்னர் சர்வதேசமட்டப் போட்டிக்கும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மாணவன் செல்வன் நித்திலன் 2010 ஜூன் மாதம் நடைபெற்ற அகில இலங்கை பௌதிகவியல் ஒலிம்பியாட்டில் 100% புள்ளிகள் பெற்று ஆசிய மட்டப் போட்டிக்கான எண்மர் குழுவிற்குத் தெரிவானார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## சர்வதேச இளையோர் தினம்

எதிர்வரு^ ஆவணி 21ம் திகதி சர்வதேச இளையோர் தினமாக திருத்தந்தை அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அன்றைய நாளில் உலகின் பல பாகங்களில் இருந்தும் வருகை தரும் இளையோரை திருத்தந்தை அவர்கள் ஸ்பெயின் நாட்டில் உள்ள மத்ரித் என்னும் நகரில் சந்திக்கவுள்ளார். "இயேசுக்கிறிஸ்துவில் ஊன்றி திடம் பெற்றவராய் நம்பிக்கையின் உறுதியோடு" என்ற மையப் பொருளில் இளையோரை இன்றைய உலகின் சவால்களை எதிர் நோக்கும் வீரர்களாக வாழ அழைத்து நிற்கின்றார்.

இதனை முன்னிட்டு எமது மறைமாவட்டத்திலும் பல்வேறு இளையோர் எழிச்சி நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு தலைவர் அருட்பணி. இரவிச்சந்திரன் அடிகள் பாதுகவாலனுக்குத் தெரிவித்தார். பாதுகாவலன் அடுத்த இதழும் இளையோர் தின சிறப்பிதழ்களாக வெளிவந்து மகிழ்விக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தென்னாபிரிக்காவால் மட்டுமே இலங்கையின் நல்லிணக்கத்திற்கு உதவ முடியும்

### லூயிஸ் ஆர்பர்

நல்லிணக்கம் தொடர்பாக தெனனாபிரிக்காவிடமிருந்து மட்டுமே இலங்கை பாடத்தைக் கற்றுக் கொள்ள முடியுமென்று சர்வதேச நெருக்கடிக் குழுவின் தலைவரான லூயிஸ் ஆர்பர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உதவ தென்னாபிரிக் காவால் செய்யக் கூடியது என்ன என்ற தலைப்பில பிரிட்டனின் த சன்டே டைம்ஸ் பத்திரிகையில் கருத்துத் தெரிவித்த லூயிஸ் ஆர்பர். கடந்த கால உண்மையை வெளியிடுவதற்கான உறுதியான முயற்சி இல்லாமல் பல ஆண்டுகளாக உள்நாட்டு மோதலை வெற்றி கொள்ள ஆரம்பிக்க முடியாது என்பதுடன், நல்லிணக்கத்தை யும் அர்பபணிப்புடன் முன்நகர்த்த இயலாது என்பதையும் ஏனைய நாடுகளையும் விட தென்னாபிரிக்கா நன்கறிந்துள்ள நிலையில் அந்தப் பாடத்தை இலங்கை கற்றுக் கொள்ள முடியும் என்றார்.

விடுதலைபபுலிகளை இலங்கை இராணுவம் தோற்கடித்து இரண்டு வருடங்கள் கடந்து விட்டபோதிலும், யுத்தத்தின் பின்னரான அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் கொள்கைகள் நாட்டின் அரசியல் நிறுவனங்களை பாதிக்கச் செய்வதாகவும், இனப்பிளவுகளை ஆழமாக்குவதாகவும் காணபடுகின்றன எனக் கூறிய அவர். பல்வேறு சவால்களுக்குத் தீர்வு காணபதற்குப் பதிலாக அரசானது, சிறுபான்மையினர் தொடர்பாக அவர்களின் பொருளாதார அரசியல் எதிர் காலத்தைத் துண்டிக்கும் நடவடிக்கைகளை அதிகரித்துக் கொணடிருக்கின்றது எனவும் குறை கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்காவிட்டால் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

## தேர்தல் முடிவுகளும் மக்கள் எதிர்பார்ப்புக்களும்

பல்வேறு வகையான அச்சுறுத்தல்கள், எதிர்பார்ப்புக்கள், மத்தியில் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. மக்களும் அச்சமின்றி வாக்களிக்கச் சென்று தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து விட்டனர். ஆனாலும் கணிசமான மக்கள் வாக்களிக்கவில்லை என்பது வாக்களிப்பு விகிதாசாரத்தை அவதானிக்கும்போது தெளிவாகின்றது.

எவ்வாறாயினும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு மக்களின் தேவைகளை உணர்ந்து செயலாற்ற வேண்டிய பாரிய பொறுப்பு உள்ளது. கொழும்பை எதிர்பார்க்காமல் உள்ளூரில் இருக்கும் வளங்கள் வருமானங்களைக் கொண்டு மக்களுக்குத் தேவையான கணிசமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதுதான் உள்ளூராட்சிச் சபைகள். அதனை குட்டி அரசாங்கம் என்று கூடக் கூறலாம்.

ஆகவே அந்தக்குட்டி அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கொழும்பில் இருந்து நிதி கிடைக்கவில்லை வளங்கள் இல்லை என்று கூறி காலத்தைக் கடத்தாமல், இருக்கின்ற கிடைக்கின்ற நிதிகளைக் கொண்டு மனித உழைப்பைப் பயன்படுத்தி சேவையாற்ற வேண்டும்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை, கொழும்பு அரச இயந்திரத்தின் திட்டங்கள், அவர்களின் அரசியல் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அல்லது சர்வதேச சமூகத்துக்கு காண்பிக்கவேண்டிய அவசியத்தின் அடிப்படையில் அமைந்து வருகின்றது என்பது பொதுவான கருத்து.

அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை மழுங்கடிக்கும் வகையில் அமைச்சர்கள் கொழும்பில் இருந்து நேரடியாக வந்து அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கின்றனர் என்றும் விமர்சகர்கள் கூறியிருந்தனர்.

இவ்வாறான கருத்துக்கள், நம்பிக்கையீனங்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்துள்ளனர் என்றால் உள்ளூராட்சிச் சபைகள் தமது பிரதேச வளங்களை வருமானங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குபவை என்ற அறிவு அவர்களுக்கு தாராளமாக இருந்திருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது.

எனவே மக்களின் தெரிவுகளை குறைத்து மதிப்பிடாமல் அல்லது தெரிவு செய்யப்பட்டு விட்டோம் - அடுத்த நான்கு வருடங்கள் வரை வெறுமனே பதவியை மாத்திரம் வைத்துப் பெருமை கொள்ளலாம் அல்லது உறவினர்கள் நண்பர்களுக்கு மட்டும் ஏதும் செய்து விட்டுப் பதவியை பயன்படுத்தி தனிப்பட்ட முறையில் வேறு வருமானங்களை தேடிக்கொள்ளலாம் என்று பிரதிநிதிகள் கருதக்கூடாது. யுத்தத்திற்குப் பின்னரும் தமிழ் மக்களுடைய அரசியல் கருத்துக்கள் அரசியல் உரிமைகள் பற்றிய எதிர்பார்ப்புகள் சரியான இடத்தில் இருக்கின்றன என்பதை தேர்தல் முடிவுகள் காட்டிநிற்கின்றன. அபிவிருத்திகள் அல்ல அரசியல் உரிமைகள்தான் உடனடித்தேவை என்பதையும் மக்கள் வெளிப்படுத்தி விட்டனர்.

இந்த நிலையில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிச் சபைப் பிரதிநிதிகள் உள்ளூர் வருமானங்களைக் கொண்டு கணிசமான அபிவிருத்திகளைச் செய்வதோடு தேசிய அரசியலில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அழுத்தங்களைக் கொடுக்கும் செயல்திட்டங்களிலும் ஈடுபடவேண்டும். அதற்கான செயற்பாடுகளில் ஜனநாயகத் தன்மை கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மக்கள் வெறுமனே அபிவிருத்தி, நிவாரணம், சலுகைகள் போன்றவற்றை மட்டும் எதிர்பார்த்திருந்தால் அவர்கள் அதற்குரிய பிரதிநிதிகளுக்கு வாக்களித்திருப்பார்கள். ஆகவே ஆட்சியை அமைத்துக்கொண்ட பிரதிநிதிகள் இதனை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பதே எமது விருப்பாகும்.

அருட்பணி. எஸ். எமில்சில் நொஷான்

## தீமைகளுக்கு எதிரான போராட்டத்தில் பொறுமை அவசியம் - பாப்பிறை

"நல்விதைகளும் களைகளும்" பற்றிய நற்செய்தி வாசகம் குறித்து தன் கோடை விடுமுறை இல்லம் இருக்கும் காஸ்தல் கன்தோல்.'போவிலிருந்து உரை வழங்கிய திருத்தந்தை, நம்முள் விதைக்கப்பட்டுள்ள மிக இரகசியமான மற்றும் சிறிய விதை, அடக்கி வைக்க முடியாத உயிர் கொண்டுள்ள சக்தியை தன்னுள் கொண்டுள்ளது என்றார். இறைவனின் திட்டத்திற்கு ஏற்றபடி வாழ்வெனும் நிலத்தில் பயிர் செய்யப்படும் இவ்விதை அனைத்துத் தடைகளையும் தாண்டிப் பலன் தரும் என்றார். முதலில் களைகள் போல் தோன்றுபவை பின்னர் பலன் தரும் கோதுமைப் பயிர்களாக மாறும் என, புனித அகுஸ்தீனார் இந்த உவமை குறித்து எடுத்துரைத்துள்ளதையும் சுட்டிக் காட்டிய பாப்பிறை, தீமையின் விதைகள் நம்முள் முளைவிடாமல் இருக்க இறைவன் மீதான விசுவாசத்தை வளர்க்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நன்மை நிரம்பிய தந்தையின் பிள்ளைகளாக இருக்கும் நாம் ஒவ்வொருவரும் அவரைப் போல் செயற்படவேண்டும் என்ற விண்ணப்பத்தையும் பாப்பிறை முன்வைத்தார்.

## 15 வருடங்களின் பின்னர் யாகப்பர் ஆலயத் திருவிழா

ஜுலை 26 கொழும்புத்துறை சந்தபுரம் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா 15 வருடங்களின் பின்னர் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 6.45 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

இந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் போர் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்தனர்.

மீள்குடியமர்ந்த பின்னர் நடைபெறவுள்ள முதலாவது திருவிழா இதுவாகும்.

இங்கு அமைந்திருந்த யாகப்பர் ஆலயம் தரை மட்டமாக அழிவுற்றிருந்தது. தற்போது தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தில் திருவிழா நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அழிந்து கொண்டிருக்கும் இலங்கையின் ஜனநாயக விழுமியங்களைக் கத்தோலிக்கர் தாங்கிப் பிடிக்க வேண்டும்

### - பத்திரிக்கையாளர் கோரிக்கை -

இலங்கையின் ஜனநாயக விழுமியங்கள், அழிவின் இறுதி எல்லைக்கே வந்துவிட்ட நிலையில் அவற்றைத் தாங்கிப் பிடிக்க வேண்டியது கத்தோலிக்க அருட்பணியாளரும் துறவியரும் பொதுநிலையினருமே என்று அந்நாட்டு முக்கிய பத்திரிகையாளர் ஒருவர் கூறினார்.

இலங்கையின் தற்போதைய உண்மை நிலையும் கத்தோலிக்கரின் பணியும் என்ற தலைப்பில் சிலாவ் நகரில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய ராவயா செய்தித்தாளின் ஆசிரியர் நாட்டில் ஜனநாயக விழுமியங்களை ஊக்குவிக்க நாம் தவறி விட்டோம் என்று கூறினார்.

நாட்டில் பரவலாக ஊழலும் பொது நிதி பெருமளவில் வீணாக்கப்படுவதையும் காண முடிகின்றது என்றுரைத்த விக்டர் ஐவன், பணம் படைத்தவர் எதையும் பெறலாம் என்று நமது அனுபவம் சொல்கிறது. அத்தகைய சமுதாயத்தில் உரிமைகள், பொறுப்புகள் இவை பற்றிய உணர்வே இருக்காது என்றார்.

இந்தக் கருத்தரங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## உலக இளைஞர் தினக் கொண்டாட்டங்கள் வாழ்வையே மாற்றியமைக்கும் ஓர் அனுபவம்

உலக இளைஞர் தினக் கொண்டாட்டங்கள் என்பது வாழ்வையே மாற்றியமைக்கும் ஓர் அனுபவம் என இளையோர் கருதுவதாக அண்மையில் உலகம் முழுவதும் இளையோரிடம் எடுக்கப்பட்ட ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது.

ஆகஸ்டில் இஸ்பெயினின் மத்ரித்தில் திருத்தந்தையுடன் இடம்பெற உள்ள இளையோர் தினக் கொண்டாட்டங்கள் குறித்து உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த 1800 இளையோரிடம் "காட்" என்ற இஸ்பானிய மையம் நடத்திய ஆய்வில், 90 விழுக்காட்டிற்கும் மேற்பட்டோர் இதனை ஒரு வாழ்வு மாற்று நடவடிக்கையாக நோக்குவதாகத் தெரிய வந்துள்ளது.


இளையோர் தினக் கொண்டாட்டங்களை 93 விழுக்காட்டினர் 'புதிய மாற்றத்திற்கான ஓர் அனுபவமாக' நோக்குவதாகவும், 92 விழுக்காட்டினர் இதனை இயேசுவின் நற்செய்தியைப் பரப்புவதற்கான ஒரு வாய்ப்பாகக் காண்பதாகவும், 90 விழுக்காட்டினர் திருச்சபைக்கான ஓர் அர்ப்பணமாகவும், 90 விழுக்காட்டினர் தங்களின் ஆன்மீக ஏக்கத்தை நிறைவு செய்வதற்கான ஒரு சந்திப்பாகவும் நோக்குவதாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

இயேசு கிறிஸ்து மீதான விசுவாசம், மற்றவர்களை மன்னிக்கவும், ஏழைகளுடன் ஒருமைப்பாட்டை அறிவிக்கவும் உதவுவதாக இந்த ஆய்வில் பங்குபற்றிய இளையோர் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தை அவர்களின் ஆண்டவரின் அருள்வாக்கு (VERBUM DOMINI)

அருள்முனைவர் ஸ்ரனி அன்ரனி OMI
விரிவுரையாளர்,
புனித சவேரியார் குருமடம்
கொழும்புத்துறை.



திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் 12ம் ஆயர் பொதுப் பேரவையின் செய்தியாக "Verbum Domini" (ஆண்டவரின் அருள்வாக்கு) திருத்தூது அறிவுரை மடலை கடந்த ஆண்டு இறுதியில் வெளியிட்டுள்ளார். இவ் அறிவுரை மடலானது கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றாகிய இறைவார்த்தைக்கு திரும்ப அழைப்பு விடுக்கின்றது. திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் இறைவார்த்தை மையமாக அமைந்திருக்க வேண்டும் என்பதை இந்த மடலில் திருத்தந்தை விளக்கியுள்ளார். கிறிஸ்தவ வாழ்வை சாட்சியமுள்ள சாரமுள்ள வாழ்வாக வாழ்வதற்கு ஏற்ற வழிமுறைகளை தாங்கி வந்துள்ளது. இறைவார்த்தையின் ஒளியில் தான் புதுப்பித்தல் நிகழ முடியும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்துகிறார். எல்லா நிலைகளிலும் வாழ்வோம். இறைவார்த்தையின் ஊற்றுக்கு திரும்பி வந்து புது வாழ்வை கண்டடைய வேண்டுமென அறைகூவல் விடுக்கிறார். திருத்தந்தையின் அறிவுரை மடல் முன்னுரை, முடிவுரை தவிர மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. (i) கடவுளின் வாக்கு (ii) திருச்சபையின் வார்த்தை (iii) உலகிற்கு இறைவார்த்தை. குறிப்பாக இந்த மடலின் மூலம் "Bible culture" நம்பிக்கை கொண்டோர் மத்தியில் உருவாக்கப்பட்டு விவிலிய மதிப்பீடுகளின் அடித்தளத்தில் கிறிஸ்தவ வாழ்வு கட்டியெழுப்பப்பட வேண்டுமென பணிக்கின்றார்.

**I. கடவுளின் வாக்கு**
(Verbum Dei)

**(i) பேசும் கடவுள்:**
கடவுளின் வெளிப்பாடு மனிதரோடும் அவர் கொள்ளும் உரையாடல் மூலமுமே வெளிப்படுகின்றது. கடவுளின் வார்த்தை வழியாகவே உலகிலுள்ள அனைத்தும் உருவாக்கப்பட்டது *(யோ 1:3)* யோவான் நற்செய்தியின் முன்னுரையானது 'வார்த்தை', படைப்பு அனைத்திற்கும் முன்பே உள்ளது என்றும் இறைவன் தன்னை அளவு கடந்த அன்பின் மறைபொருளாக வெளிப்படுத்துகின்றார் என்றும் கூறுகிறது. கடவுள் தமக்கிடையேயுள்ள ஆள் தன்மையில் அன்புறவுப் பரிமாற்றத்தினூடாக எம்மையும் அன்பில் பங்கெடுக்க உரையாடல் மூலம் அழைப்பு விடுக்கின்றார். எனவே வார்த்தையினூடாக தன்னை வெளிப்படுத்தும் இறைவனை நம்பிக்கையில் ஏற்றுக் கொள்வதன் மூலமும், தூய ஆவியின் செயற்பாடுகளிற்கு கீழ்ப்படிதல் மூலமுமே எம்மை விளங்கிக் கொள்ள முடியும். இறைவார்த்தையின் ஊடாக வெளிப்பட்ட இறை வெளிப்பாட்டின் மூலமே மனிதன் தன்னுடைய இருப்பையும், நிலையையும் விளங்கிக் கொள்ள முடியும் அதே வேளை இறைவார்த்தையானது வெவ்வேறு வடிவங்களிலும் வெளிப்படுகின்றது. இறை வெளிப்பாட்டின் அடிப்படையாக கிறிஸ்துவில் நிறைவு பெற்றாலும் படைப்பில், மனிதனை படைத்ததில், இறுதியில் முழுமை பெறுதல் நிலையில் வெளிப்படுகின்றது.

**(II) பேசும் கடவுளுக்கு பதிலிறுத்தல்:**

இறைவார்த்தை ஆகமத்தில் பேசப்படுகின்ற வார்த்தை அல்ல; மாறாக அது ஒரு இலக்கை நோக்கியே செல்கின்றது. கடவுள் பல் வேறு வழிகளில் உரையாடல்கள் மூலம் தன்னை வெளிப்படுத்துகின்றார். இறைவன் ஒருவரே மனிதனின் ஏக்கங்களை புரிந்து பதிலளிப்பவராக் இருக்கிறார். என்பதை மனிதன் மறந்துவிடுகின்றான். குறிப்பாக மேலைத் தேயத்தில் கடவுள் மனிதனின் சுயாதீன வாழ்விற்குத் தடையாக இருப்பதாக சிந்திப்பது வேதனைக்குரியது. கடவுளுடைய மீட்புதிட்டத்திலே கடவுள் மனிதரின் நல்வாழ்விற்காக, முழுமையான விடுதலைக்காக செயற்படுபவராக, பேசுபவராகவே தன்னை வெளிப்படுத்துகிறார் என்பதை நினைவிற்கொள்ளுதல் அவசியமாகும். மனிதர் நிறைவாழ்வை மிகுதியாக பெறுவதற்காகவே தான் இவ்வுலகிற்கு வந்ததாக இயேசுவே குறிப்பிடுகின்றார் *(யோ 10:10)*. எனவே இறைவார்த்தையை எமது வாழ்வின் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் சிறந்த பதிலிறுத்தலாக பரிவும், ஏக்கங்களை, எமது மதிப்பீடுகளை விரிவாக்கவும் பயன்படுத்த வேண்டும். விவிலியம் முடிவில்லா வாழ்விற்கான உயிருள்ள வார்த்தைகளை தன்னகத்தே கொண்டிருப்பதினால் நிறை வாழ்வின் மகிழ்ச்சியை இதன் மூலம் கண்டுணர முடியும் என்பதை ஆழமாக நம்புதல் அவசியமாகும். இறைவார்த்தையானது இறையுரையாடலை தோற்றுவிக்கின்றது. கடவுளின் வார்த்தை தன்னிலே உரையாடல் தன்மையை இறை வெளிப்பாட்டில் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது. எமது நம்பிக்கை வாழ்வும் சரணடைதலுமே எமது பதிலாக அமைய வேண்டும். எதிர் மறையாக பதிலிறுத்தல் அமைகின்ற போது அது பாவமாகும். பேசும் கடவுளுக்கு நாம் தரும் பதிலிறுத்தலுக்கு கன்னிமரியாள் சிறந்த மாதிரியாக திகழ்கின்றார். அன்னை மரியா நம்பிக்கையிலும் சரணடைதலிலும் சிறந்த பதிலை இறைவார்த்தைக்கு அளித்தார்.

**(iii) திருவிவிலிய விளக்கம்**
இறைவார்த்தைக்கும் நம்பிக்கை வாழ்விற்குமிடையேயுள்ள தொடர்பானது திருச்சபையின் நம்பிக்கையை சார்ந்தே திருவிவிலிய விளக்கம் அமைய வேண்டுமென்பதை கோடிட்டுக் காட்டுகின்றது. மறைநூல், திருவிவிலியம் இறையியலின் ஆன்மாவாகும். விவிலியம் என்பது திருச்சபையின் மரபு வழியாக பாதுகாக்கப்பட்டு வருவதால், திருச்சபையின் ஆசிரியத்தின் ஒளியில் விளக்கமான நம்பிக்கையை வளர்க்கக்கூடியதாகவும், ஆன்மீக அர்த்தம் கொடுக்கக்கூடியதாகவும் அமைதல் வேண்டும். வாழ்வு மையம் கொண்ட, கிறிஸ்துவின் வாழ்வின் அடித்தளத்தில் புதுப்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## உங்களுடன் சில வார்த்தைகள்



### இனிய இளம் நெஞ்சங்களே!

இதோ காவலன் உங்களுக்காக கதவு திறக்கிறான்
இது உங்களுக்கான பகுதி மட்டுமல்ல உங்களின் பகுதியும் தான்
உங்கள் வெற்றியில் மகிழவும்
தோல்வியில் துணை வரவும்
சோர்வில் ஊக்குவிக்கவும்
உங்களோடு பயணிக்கவும் இதோ
உங்கள் சிநேகனாய் அறிமுகமாகிறேன்.
இது மாம்பழ சீசன்
காயாகக் கடித்தால் அது புளிக்கிறது
காலம் தாமதித்தால் புளுக்கிறது
பருவத்தே உண்டால் இனிக்கிறது.
வாழ்க்கையும் இது போலவே
இளமைப் பருவம் இனிய பருவம்
பருவத்தே செய்யும் பயிர் பயன்தருகிறது.
உங்கள் வாழ்க்கைக் கனியை நீங்களும் நிறைவாக சுவைத்து மகிழ வேண்டும். அதற்கு வழிகாட்டத்தான் பத்து வரிகள்
உங்கள் ஆக்கங்களுக்கும் இங்கு இடமுண்டு
வினாக்களுக்கும் விடையுண்டு.
சிறிய ஆக்கங்கள்
சிந்திக்க வைக்கும் துணுக்குகள்
தேடலைத் தூண்டும் வினாக்கள்
இவை இங்கு திலகமிட்டு வரவேற்கப்படும்
கரம் நீட்டுகிறோம் கைகுலுக்குங்கள்
இயேசுவின் இறையரசுப்பாதையில் இணைந்து நடப்போம்.
மறுமடல் வரை விடைபெறும்

**சிநேகன்**

## நினைவில் நிறுத்த ஒரு வசனம்

**உணர்வுகள் எண்ணங்களால் உருவாகின்றன. எண்ணங்கள் இலட்சியத்தால் வழிநடத்தப்படுகின்றன. எனவே உணர்வுகளைவழிநடத்த, எண்ணங்களை சீர்படுத்த, நமக்கென இலட்சியங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.**




### இளையோர் செய்திகள்

Ø கொழுமத்புத்துறை தூய செபமாலை ஆலய இளையோர்கள் கடந்த 17.07.2011 அன்று உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலய இளையோருடன் சங்கமமாகினர். காலையில் புறப்பட்டு உடுப்பிட்டி சென்ற அவர்களை இரட்சகர் மன்றத்தினர் மகிழ்வோடு வரவேற்றனர். அறிமுக நிகழ்வுகளின் பின்னர் அனைவரும் ஒரு பேருந்தில் புறப்பட்டு நற்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தை அடைந்தனர். கருத்துப் பரிமாற்ற நிகழ்வுகளும் மகிழ் பொழுதுமாக அன்றைய நாள் கழிந்தது. இளையோர் இயக்குநர் அருட்பணி ம. வி. இ. இரவிச்சந்திரன் அடிகளார் சங்கமத்தை நெறிப்படுத்தினார்.

Ø பங்குத்தந்தையர்கள் அருள்பணி அன்ரன் மத்தியாஸ், அருட்பணி அ. அகஸ்ரின் ஆகியோர் ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர்.

### ➢ குளமங்கால் பங்கு இளையோர் தும்பளையில்

குளமங்கால் பங்கின் அனைத்து ஆலயங்களின் இளையோரும் இணைந்து ஒரு நாள் பயிற்சி செயலமர்விற்காக தும்பளை ஊர்து அன்னை கெபிக்குச் சென்றிருந்தனர். வன்னி மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத் தலைவரும் இளம் வளவாளருமான திரு நியூமன் அவர்களும் இயக்குநர் அருள்பணி ம.வி. இரவிச்சந்திரனும் கருத்தமர்வை நெறிப்படுத்தினர். பங்குத்தந்தை றெக்ஸ் சவுந்தரா அனைத்து ஒழுங்குகளையும் மேற்பார்வை செய்தார். 14.07.2011 அன்று இந்நிகழ்வு இடம் பெற்றது.

### ➢ அச்சுவேலியில் விடியல் இசைக்குழு

யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் விடியல் இசைக் குழுவினரால் "விடியல் ஸ்வரங்கள்" அச்சுவேலி தூய அந்தோனியார் ஆலயத்தில் நள்ளிரவு தாண்டியும் ஒலித்தது. ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட புதிய பங்குப் பணிமனையைத் திறந்துவைக்கும் நிகழ்வைச் சிறப்பிக்க இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. ஏற்பாடுகளைச் செய்த தூய அந்தோனியார் ஆலய இளையோர் மன்றத்தினருக்கும், பங்குத்தந்தை அன்ரனிப பாலா அவர்களுக்கும் பாராட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்வில் இருந்து கற்றுக் கொள்வோம்

## புதுமை படைத்த ஜோன் வெஸ்லி

ஜோன் வெஸ்லி என்ற ஒரு பெரிய பணக்காரர் இங்கிலாந்து நாட்டின் சில கிராமப் பகுதிகளில் குப்பை கூழங்கள், புதர்கள் மண்டிக் கிடப்பதையும், மக்கள் வறுமையில் வாடுவதையும் கண்டு மனம் நெகிழ்ந்தார். நன்றாக யோசித்த அவர், அந்தக் கிராமங்களுக்குச் சென்று செடி, கொடிகளின் விதைகளைக் கொடுத்து "இவற்றை நன்கு வளர்ப்பவர்களுக்கு நல்ல பரிசு தரப்படும்" என்று அறிவித்தார். ஆச்சரியம் நிகழ்ந்தது. சில மாதங்களில் குப்பை கூழங்கள் நிறைந்த பகுதி பசுமையான பலன் தரும் இடமாக மாறிப்போனது. அவரது பரிசுத் திட்டம் பெரும் வெற்றியும் பெற்றது. சுத்தமான தெருக்களும் அழகிய செடிகளும் மக்களை வாழ்வித்தன.

எம். ஞானம்

# தலைவிதி

சேவியர் அந்தோனி

வண்ணச் சிறகுகள் கொண்ட பறவை அது.
கிணற்றுக்குள் விழுந்துவிட்டது.

மனிதர் யாரும் இறங்க முடியாத ஆழ்கிணறு அது.
நல்ல வேளையாக அதிகம் அடிபடவில்லை.

ஆனால் தனக்கு எக்கச் சக்கமாக
அடிப்பட்டு விட்டதாக நம்பியது:

'ஐய்யய்யோ.....காப்பாற்றுங்கள்...!
இப்படிக் கிணற்றில் விழுந்து கிடக்கிறேனே...!'

கிணற்றைச் சுற்றி நின்ற மனிதர்கள் பதிலுக்குக் கத்தினார்கள்:

'பறவையே..! உனக்கு அழகான சிறகுண்டு.
மெல்ல மெல்லப் பறந்து மேலே வா..!'

'ஐயோ...! அதெல்லாம் முடியாது.
பறந்து நான் மேலே வரும் போது...
சுவரில் உரசிக் கீழே விழுந்து விட்டால்...
என் சிறகின் அழகே போய்விடும்.
ஐயோ காப்பாற்றுங்களேன்...!'



'அப்படியெல்லாம் ஒன்றும் ஆகாது.
உனக்கு வலுவான சிறகுண்டு.
தைரியமாய் மேலே பறந்து வா...!'

ஒப்பாரி ராகத்தில் புலம்பியது.

'ஐயகோ...இந்த மனிதர்கள் இப்படி ஆழமாய்க்
கிணறை வெட்டிப் போட்டு.....
என்னை விழ வைத்து...
வெட்டித்தனமாய் நின்று வேடிக்கை பார்க்கிறார்களே!
'பறந்து வா' என்று புத்திமதி வேறு கூறுகிறார்களே...!'

எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை பறவை.
கிணற்றை நொந்தது. கிணற்றை தோண்டியவனை நொந்தது.
புவியீர்ப்பு விசைக்குச் சாபமிட்டது.

ஆனால்...பறந்து மேலே வர மட்டும் பயந்தது.
அங்கேயே வாழ முடிவெடுத்தது.

உள்ளே இருந்த புழுப் பூச்சிகளை உண்டு வயிற்றை
நிரப்பிக் கொண்டது. சுகம் கண்டது:
'இந்தக் கிணற்று வாழ்வும் நன்றாய் தானிருக்கிறது.'

நாட்கள் நகர்ந்தன. மெல்ல மெல்லப் பறக்க மறந்தது பறவை.
பயன்படுத்தப்படாத இறகுகளும் உதிர ஆரம்பித்தன.


ஒரே வாரத்தில் பசியாறக் கிணற்றில் ஒன்றுமில்லை.
பட்டினியால் வாடிய பறவை முடிவெடுத்தது:
'இனி சிறகை விரிப்பேன். பறப்பேன்...!'

இறகுகளை இழந்த பறவை சிறகை விரித்துப் பறக்கப் பார்த்தது.
எப்படி முடியும்? உள்ளேயே கிடந்தது. பட்டினியால் வாடியது.
அணுஅணுவாய்ச் செத்துக் கொண்டிருந்தது.

உயிர் விடுமுன் உரைத்தது:
'இது என் தலைவிதி. இப்படியே கிடந்து சாகிறேன்..!'

**மனிதா.....**
**உன் தலையில் ஏது விதி...?**
**உன் தலைக்கு நீயே விதி...!**

# மூன்று தமிழ் மறைமாவட்டங்களின் சமூக தொடர்பாடல் ஆணையகங்கள் இணைந்து மேடையேற்றிய நாட்டுக்கூத்து



இலங்கையின் அப்போஸ்தலரான அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 300ஆவது ஆண்டு நிறைவில் யோசப்வாஸ் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறும் முகமாக இலங்கையின் அப்போஸ்தலர் யோசப்வாஸ் என்ற தலைப்பில் மட்டக்களப்பு பாங்கிலான வடமோடி நாட்டுக்கூத்தினை மூன்று தமிழ் மறைமாவட்டங்களின் சமூக தொடர்பாடல் ஆணையங்கள் இணைந்து மேடையேற்றியது.

யூன் 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் தூய சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் யூலை 17ல் மட்டக்களப்பு தூய மைக்கல் கல்லூரியிலும் யூலை 18ல் திருகோணமலை குவாடலூப்பே அன்னை ஆலய முன்றலிலும் யூலை 19ல் மன்னார் முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய முன்றலிலும் மேடையேற்றப்பட்டது. மன்னாரில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அதி வணக்கத்திற்குரிய மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் கலைஞர்களைப் பாராட்டி பொன்னாடை போர்த்து, மாலை அணிவித்து நினைவுச் சின்னங்களை வழங்கிக் கௌரவித்தார். எமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஏ.சி.போல் றொகான், பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்பணி. எஸ்.ஏ றொஷான் அடிகள் ஆகியோரும் ஆயரினால் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அண்ணாவியார் அன்பழகன் குருஸ், மத்தள அண்ணாவியார் சண்முகலிங்கம் ஆகியோரின் உருவாக்கத்திலும் அருட்பணி. ஏ.சி.போல் றொகானின் அயராத முயற்சியிலும் மூன்று தமிழ் மறைமாவட்ட அருட்சகோதரர்களின் நடிப்பிலும் இந்நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது. தூய சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தவத்திரு தனிநாயக தமிழ் மன்றத்தினால் இக்கூத்து தயாரித்து அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் குழந்தைகள் கைவிடப்படும் சம்பவங்கள் அதிகரிப்பு

வட இலங்கையில் குழந்தைகள் கைவிடப்படல் மற்றும் கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக சண்டே டைம்ஸ் செய்தித்தாள் தெரிவித்துள்ளது. குறிப்பாக வன்னியிலேயே இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியா மற்றும் செட்டிகுளப் பகுதிகளில் நான்கு குழந்தைகள் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாகவும் இரண்டு குழந்தைகள் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சண்டே டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

கைவிடப்பட்ட நான்கு குழந்தைகளும் துணியால் சுற்றப்பட்டு வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் கிடத்தப்பட்டிருந்தன.

போருக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள வறுமை, குடும்பத் தலைவர்கள் இல்லாமை போன்றவையே இதற்கான காரணங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோர்வே நாட்டிற்கான திருத்தந்தையின் அனுதாபச் செய்தி

நோர்வேயின் ஒஸ்லோ நகரின் குண்டு வெடிப்பு மற்றும் அண்மைத் தீவின் இளைஞர் முகாமில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு ஆகியவை குறித்து தன் ஆழ்ந்த கவலையையும் அனுதாபங்களையும் வெளியிட்டு அந்நாட்டிற்கு இரங்கல் தந்தி ஒன்றையும் அனுப்பியுள்ளார் திருத்தந்தை 16ம் பெனடிற்.

கவலை கொண்டுள்ளதாக நோர்வே மன்னர் 5ம் ஹெரால்டுக்கு அனுப்பியுள்ள அத்தந்திச் செய்தியில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்காக தான் செபிப்பதாகவும் உறுதி கூறியுள்ளார்.

இந்தத் துன்பகரமான நேரத்தில் ஒரே குடும்பமாய் ஆன்மீக ஒன்றிப்பைக் காணும் நோர்வே நாடு, பகைமை மற்றும் மோதல்களின் வழியை ஒதுக்கித்தள்ளும் என நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அதில் கூறியுள்ளார் பாப்பிறை.

# திருத்தந்தை 12ம் பத்திநாதர் பதினோராயிரம் உரோமன் யூதர்களைக் காப்பாற்றினார்

இரண்டாம் உலகப் போரின் போது திருத்தந்தை 12ம் பத்திநாதரின் நேரடித் தலையீட்டால் உரோமையில் 11 ஆயிரத்திற்கும் அதிகமான யூதர்கள் காப்பாற்றப்பட்டனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் அண்மையில் கண்டு பிடித்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

உரோமையிலுள்ள ஜெர்மன் தேசிய ஆலயமான மரியன்னை ஆலயத்தின் பொதுவைக் கூடத்தில் ஆய்வு செய்த போது பல மிக முக்கியமான ஆவணங்களைக் கண்டு பிடித்ததாக ... அமைப்போம் அமைப்பின் ஜெர்மனிக்கான பிரதிநிதி மைக்கல் ஜெஸ்மன் கூறியுள்ளார்.

இந்த ஆவணங்களில், இரண்டாம் உலகப் போரின் போது திருத்தந்தை 12ம் பத்திநாதரின் நேரடித் தலையீட்டால் உரோமையில் பதினோராயிரத்துக்கும் அதிகமான யூதர்கள் காப்பாற்றப்பட்டது குறித்த விபரங்கள் இருப்பதாக ஜெஸ்மன் என்பவர் கூறியுள்ளார்.

போலந்தின் ஆஷ்விஷ் வதைப்போர் முகாமில் சேர்ப்பதற்கென, 1943ம் ஆண்டு அக்டோபர் 16ம் திகதி உரோமையில் 1007 யூதர்கள் கைது செய்யப்பட்டு அங்கிருந்து இரயிலில் அனுப்பப்பட்டனர் என்றும், அச்சமயம் திருத்தந்தை 12ம் பத்திநாதர் அமைதி காத்தார் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

ஆயினும் தற்போதைய புதிய கண்டுபிடிப்புக்களின்படி, திருத்தந்தை 12ம் பத்திநாதர், அந்தக் கைதுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அன்று பிற்பகல் 2 மணிக்கு நேரடியாகச் செயற்பட்டார் எனவும், அவரின் முயற்சி பலனற்றுப் போனது எனவும் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதைகள் மாறிய பயணம்

சிறுகதை



அந்த வீதியால் புழுதி கிளப்பியபடி விரைவாகப் போகும் மோட்டார் சைக்கிள் யாருடையது? என்பதை சத்தத்தை வைத்தே அது அருளண்ணையின் மோட்டார் சைக்கிள் என்பதை அடையாளப்படுத்திக் கொள்ளலாம். அருளண்ணை சிறியவர்களோடு சிறியவர்களாகவும் பெரியவர்களோடு பெரியவர்களாகவும் பழகும் இயல்புடையவர். அவர் ஒரு நிறுவனத்தின் அதிகாரி. அவருக்கு 45 வயது. அவருக்குக் கீழே பணிபுரியவர்கள் யாவருமே வயதில் சிறியவர்கள். அருளண்ணை அண்ணாவாகவும், தந்தையாகவுமே யாவருக்கும் காட்சி கொடுத்தார்.

அந்த நிறுவனத்தின் கணக்காளராக டார்சினி இணைந்து கொண்டாள். கடவுளுடைய படைப்பில் அவளுடைய அழகு அற்புதமாக இருந்தது. பார்ப்பவர்களுக்குக் கவரும் காந்தக் கட்டிகளை அவள் கண்களில் பூட்டியுள்ளானோ? என்று எண்ண வைக்கும். வெள்ளி மணிகள் சிந்திச் சிதறுவதுபோல் சிரிப்பு. தெளிந்த நீரருவி போல பேச்சு அருமையாக இருந்தது இதனால் அலுவலகத்தில் அலுவல் இல்லாமலே பலர் அவளுடன் கதைப்பதற்கு ஆசைப்பட்டனர். கணக்கு வழக்குகளை சரி பார்ப்பது அருளண்ணை தான். டார்சினியின் வருகையின் பின்னர் அருளண்ணை நிறையவே மாறிவிட்டார். மிக அழுத்தமாக மினுக்கப்பட்ட ஆடைகளுடன் நவநாகரிகப் போக்குக்கேற்ப தலைமுடியை கத்தரித்தும் மிக எடுப்பாக, பத்து வயது குறைந்த கட்டிளம் காளையாக வலம் வரத் தொடங்கினார். பற்களைக் கூட நன்றாக சுத்தம் செய்திருந்தார். அவரது மாற்றம் கண்டு பலரும் பலவிதமாகப் பேசிக்கொண்டனர். கலியாண ஆசை அரும்பிவிட்டதெனச் சிலர் முணுமுணுத்தனர். அவரது தெரிவு எங்கு அமையப் போகிறது என்பதை யாவரும் ஆவலோடு எதிர் பார்த்திருந்தனர்.

அதே அலுவலகத்தில் தான் சுகிர்தன் என்ற இளைஞனும் பணி புரிந்தான். சுகிர்தன் தான் மூத்த பிள்ளை. ஒரு தங்கை, அம்மா என அவனது குடும்பம் சுருங்கியதால் அவனது வருமானத்தில் தான் அவனது குடும்பம் மிதமிஞ்சிய வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தது. அம்மா ஒரு ஊக்கம் உடைய பெண். ஆகையால் சுகிர்தன் தோட்டத்தையும் கிண்டத் தொடங்கினான். அம்மாவின் ஆலோசனைகள் அவனுக்கு என்றும் அமிர்தமாகும். வருமானத்தில் அரைவாசி தங்கைக்காக வைப்பிலிடுவான். மிகுதியில் ஆடம்பரமாக வாழ்ந்தனர். கௌரவத்திற்காக படித்த படிப்பிற்காக ஒரு வேலை. அது தான் அருளண்ணையின் நிறுவனத்தில் பணி புரிந்தான்.

சுகிர்தன் வெளிக்கிடும் அழகைக் கண்டால் அவனது பாதங்கள் சேற்று மணலில் பட்டுப் பசுந்தளிர்கள் பூக்கும் அழகை ஒத்திருந்தன. யாருமே எண்ணிப் பார்க்க முடியாத அழகு அவனது முயற்சியாண்மை டார்சினியைக் கவர்ந்தது. அவனது குணம் பிடித்தது. இருவரும் காதலர்களாகினர். சுகிர்தன் டார்சினியை தாயிடம் அழைத்துச் சென்ற போது தாயின் முகத்தில் ஏற்பட்ட சிறிய மாற்றத்தை அவனால் அளவிட முடியவில்லை. எல்லாத் தாய்மாரும் மருமகளை வில்லியாகவே நினைப்பது போல் தன்னுடைய அம்மா எண்ணிவிட மாட்டார் என்று இத்தனை காலமும் மார் தட்டிய தேகம் சோர்வடைந்தது. ஒருவாறு தற்துணிவை வரவழைத்துக் கொண்டு "அம்மா இவான்ர பெயர் டார்சினி. எங்கட அலுவலகத்தில் கணக்காளராகப் பணியாற்றுறா. உங்களுடைய மருமகளாக வருகின்ற பாக்கியம் பெற்றவள்." எனக் கூறி முடித்தான். டார்சினி ஒரு கணம் திகைத்தாள். கூட்டி வந்ததும் பத்தாமல் தாயிடம் போட்டுக்கொடுத்து, தாய் மூலமாக என்ன நடக்கப் போகிறதோ என அவள் ஏங்கித் திகைத்த வேளை.... "மருமகளே வாம்மா. அவன் விரும்பிட்டான் அதற்கு நான் ஏன் தடைக்கல்லாக இருக்க வேணும்" எனக் கூறி முடித்தாள். டார்சினிக்கு கால்கள் நிலத்தில் படவில்லை அவளுடைய சிறகுகள் விரிந்து பறந்தன. 'பிள்ளை எங்களுக்கு சீதனம் எதுவும் தேவையில்லை என்ர பிள்ளை ஆண்பிள்ளை உம்முடைய பெற்றோருக்கும் சொல்லி சம்மதம் வாங்கி விடும்' என்றாள் அந்த அன்புத் தாய். உண்மையிலேயே டார்சினி அதிஸ்டசாலிதான். அவளது இதயம் படபடத்தது. அன்றிரவுத் தூக்கமும் இதமாய் இருந்தது.

நாட்கள் நகர்ந்தன. அருளண்ணை இப்பொழுதெல்லாம் எதற்கெடுத்தாலும் சீறிச் சினக்கத் தொடங்கினார். சுகிர்தனும் டார்சினியும் காதலிக்கும் செய்தியை அலுவலகமே அறிந்த பின்னர் தான் அருளண்ணைக்கு விடயமே தெரியவந்தது. அருளண்ணையின் மனதில் போராட்டம் தொடங்கியிருந்தது. சுகிர்தனுடன் கதைக்கக் கூடாது என டார்சினியை அருளண்ணை எச்சரித்தார். அவள் அலுவலகத்திலே இருந்த வேளை அவளது வீட்டுக்காரரிடம் சென்று தனக்கு டார்சினியை பிடித்துள்ளதாகவும் கலியாணம் செய்து தருமாறும் வேண்டினார். பெற்றோர் திகைத்தனர். சுகிர்தனை விரும்பியுள்ளதையும், அருளண்ணைக்கு வயது கூட என்பதையும் கூறி மறுத்தனர். இதனால் கோபமடைந்த அருளண்ணை அன்று மதியம் அவசர அவசரமாக அலுவலகத்தில் புகுந்து சுகிர்தன் மேல் பொய்க் குற்றம் சாட்டி வேலையினின்றும் நீக்கினார். மானம் மரியாதையுடன் வாழ்ந்த சுகிர் தன் பழிசுமத்தப்பட்டமையால் வெகுண்டான். அவரது பழி சுமத்தல் ஏன் என்பதை அவன் புரிந்து கொண்டான். டார்சினி சாடை மாடையாக அருளண்ணையின் நடவடிக்கையை சுகிர்தனுக்குக் கூறியிருந்தாள். அவன் டார்சினியிடம் செல்ல முற்பட்ட வேளை கழுத்தைப் பிடித்து தள்ள முயற்சித்ததை அலுவலகத்தில் இருந்த யாருக்குமே பிடிக்கவில்லை. சுகிர்தன் டார்சினியைப் பார்க்காமலேயே புறப்பட்டான். அன்றிலிருந்து அவளை அடிக்கடி கணக்கு வழக்கைச் சரி பார்க்க வேண்டும் எனக் கூறி அருளண்ணை கூப்பிடுவதை டார்சினி வெறுத்தாள். யாவற்றையும் அறிந்த சுகிர்தன் டார்சினியின் பெற்றோருடன் திருமண நாள் குறிக்குமாறு வேண்டி நின்றான். அவர்கள் அதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினர். சுகிர்தனுடன் வாழும் இல்லற வாழ்விற்காக அவள் ஏங்கி நின்றாள். வேலைக்குப் போவதையும் நிறுத்திக் கொண்டாள்.

**எஸ்.கே. லதா**

ஒருநாள் அதிகாலை சீறிவந்த மோட்டார் சைக்கிள் டார்சினியின் வாசலில் புழுதி பறக்க நின்றது. அருளண்ணை நிதானம் இழந்து டார்சினியை தாறுமாறாக பேசத் தொடங்கினர். கணக்குகளில் பிழையிருந்ததாகவும், கணக்கை முடிக்காமல் வேலையில் நின்றதாகவும் குற்றஞ்சாட்டினார். "அட இவ்வளவு தானா? டார்சி நீ போய் அந்தக் கணக்கை முடிச்சிட்டு வா" எனத் தந்தை கூற அருளண்ணையின் முகத்தில் இனம் புரியாத மின்னலொன்று பளிச்சிட்டது. "இல்லையப்பா நான் போக மாட்டேன் கணக்குப் புத்தகங்களை அருளண்ணை கொண்டு வந்தால் செய்து கொடுப்பேன்" என்று மறுத்திருந்தாள். ஒருவாறு சமாதானம் செய்து தந்தை அவளை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார்.

அவளை தன்னுடைய அலுவலக அறைக்கு அழைத்த அருளண்ணை ஒரு கடிதத்தை அவளிடம் நீட்டினார். 'எனக்கு சொல்லத் தெரியாது படிச்சுப்பார்' என்று அவர் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க முட்டிமூப்பவர் போல சளிச் சத்தம் மார்பில் மேலிட உதடுகள் விம்பிட டார்சினியின் கால்களில் விழுந்து அழத்தொடங்கினார். கடிதத்தை படித்த அவளுடைய கண்கள் சுகிர்தனை மறக்கத் தொடங்கின. டார்சியின் முடிவு கேட்டு புழுவாய்த் துடித்த சுகிர்தனின் மனதிலே டார்சினியைக் கூட்டிச் சென்ற போது தாயின் முகத்தில் தெரிந்த சிறிய மாற்றத்தின் காரணத்தை புரிய வைத்தது அவனது நிலைமையை மாற்ற யாராலும் முடியவில்லை.

டார்சினி அருளண்ணையை திருமணம் செய்ததால் அவளுக்கு அடுத்தடுத்து நான்கு பிள்ளைகள் பிறந்தன. வில்லனாக வந்த அருளண்ணையை யாருமே மதிப்பதில்லை. டார்சினியின் வாழ்விலும் அவர் வில்லத்தனம் காட்டத் தொடங்கினார். பிள்ளைகளைப் பராமரிக்க அவளுக்கு யாரும் உதவவில்லை. சுகிர்தனுக்குச் செய்த துரோகம் தான் தன்னைத் துரத்துவதாக எண்ணிக் கொண்டாள். அழகு அவளிடம் இருந்து தற்காலிகமாக விடைபெற்றிருந்தது. சிரிப்பு மாறியது. புன்னகை கூட புதைந்து போனது. அருளண்ணை தான் ஆண்மகன் என நிரூபிக்க நான்கு பிள்ளைகளைப் பெற முடிந்ததே ஒழிய இளமை மிகுந்த மனைவியின் இரசனைகளை மதிக்க முடியவில்லை. அவள் விரும்பியதெல்லாம் அருளண்ணை வெறுத்தார்.

ஒவ்வொரு ஞாயிறும் தேவாலயம் செல்லும் டார்சியை அவர் தடுத்தார். தெய்வம் ஒன்றில்லை என வாதிட்டார். அதனால் அவளுடைய வேதாகமப் புத்தகத்தை நடு இரவில் எடுத்துச் சென்று கோடிக்குப் பின்புறத்தில் மண்ணெண்ணை ஊற்றி எரித்தார். இதனால் கைகள் நோகத் தொடங்கின. டார்சினி அவருக்காக மன்றாடினாள். அவர் செய்யும் சகல தீமைகளையும் மன்னிக்குமாறு மன்றாடினாள். அவளும் மன்னித்தாள். அருளண்ணையால் அவளுடைய மனதை புரிந்து கொள்ள முடியவில்லை. அவளுடைய இயலாமை சண்டையும் சச்சரவுமாகி அவளது வாழ்வை நரக வாழ்விற்கு தள்ளியது. காலங்கள் நகர்ந்தன. நாட்டுச் சூழ்நிலை 'பயங்கரவாதி' என்ற முத்திரையுடன் அருளண்ணை கைதியானார். டார்சி அவருக்கு இப்படி எழுதினாள். 'அன்பற்றவர்களுக்கு எங்களை உறவெனக் கூற வேண்டாம் எங்களைத் தேடவும் வேண்டாம். நாங்கள் தேடவும் மாட்டோம்.' கடிதத்தை ஆவலோடு பிரித்துப் பார்த்த அருளண்ணைக்கு கால்கள் தடுமாறின. தேகங்கள் தான் தழும்பைச் சுமந்தன. இப்பொழுது மனதும் தழும்பேற்றது. நடுங்கும் மனதுடன் சிறைச்சாலைக் கம்பியைப் பற்றிக் கொண்டார். அவரது மீடுக்குச் சரிந்திருந்தது. ஆனால் மனசு தெளிந்தது. அதனால் தான் அவர் அவர்களை தேடாமலேயே விட்டுவிட்டார் போலும்.

சுகிர்தன் இனப்பிரச்சினையின் போது நாட்டிற்காக உயிர் துறந்திருந்தான். சுகிர்தனின் அம்மா எறிகணைக்குப் பலியாகியிருந்தார். சுகிர்தனின் தங்கை தான் டார்சினிக்கும் பிள்ளைகளுக்கும் உதவிக்கரமாய் வெளிநாட்டிலிருந்து உதவிக் கொண்டிருந்தாள். டார்சினி விதவைக் கோலத்துடன் வாழ்ந்துகொண்டேயிருக்கிறாள்.

## தமிழக மக்கள் தொகை அதிகரிப்பு

தமிழகத்தில் கடந்த இருபது ஆண்டுகளில் நகர்ப்புற மக்கள் தொகை ஏறத்தாழ 14 விகிதம் அதிகரித்திருப்பதாக கடந்தவாரம் வெளியிடப்பட்ட புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கை கூறுகிறது.

தமிழகத்தில் 1991ம் ஆண்டிலிருந்து நகர்ப்புற மக்கள் தொகை அதிகரித்திருப்பதாகத் தெரிவித்த தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலக இயக்குனர் எஸ்.கோபாலகிருஷ்ணன், கடந்த இருபது ஆண்டுகளில் நகர்ப்புற மக்களின் எண்ணிக்கை, மொத்த மக்கள் தொகையில் 48.45 விகிதம் அதிகரித்திருப்பதாக அறிவித்தார்.

32 மாவட்டங்களைக் கொண்ட தமிழகத்தில், ஏழு கோடியே 21 இலட்சத்து 38 ஆயிரத்து 958 பேர் வாழ்கின்றனர் எனவும், இவர்களில் 1000 ஆண்களுக்கு 995 பெண்கள் வீதம் இருப்பதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது.

கல்வியறிவு பெற்றவர்களின் விகிதம் 80.33 விழுக்காடாக இருக்கின்றது. இது 2001ல் 73.47 விகிதம் இருந்தது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தொகை பட்டியல் 120 கோடியாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெற்றோர் பிள்ளைகள் நல்லுறவு

எஸ். பிலிப்

## பிள்ளைகளுக்காக பெற்றோர்களா முடிவெடுப்பது?

பிள்ளைகள் சிறுவர்களாய் இருக்கும்போது பெற்றோர் வழிகாட்ட கடமைப்பட்டவர்கள். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி பாடங்களைக் கற்று தேர்வில் வெற்றிக்கு வழிகாட்ட வேண்டும். ஆனால் அவர்கள் இளைஞராய் மாறி உயர் படிப்புக்கான விருப்பம் பாடம் தேர்ந்து எடுக்கும் போதும் உயர்கல்வி பற்றி தீர்மானம் செய்யும்போதும் பெற்றோர் மட்டும் முடிவு எடுப்பது சரியல்ல. அதைப் பெற்றோர் பிள்ளையோடு நயமாக பேசி முடிவு எடுப்பதுதான் நல்லது.

ஆனால் பல குடும்பங்களில் யார் பெரியவர்? பொடிப் பயல் நான் சொல்வதைக் கேட்கட்டும். என் கௌரவம் என்ன ஆவது? என்று வீண்பெருமையை பேசி, தங்களின் ஆசைக் கனவுகளை பிள்ளைகளின் விருப்பமில்லாமல் போகும் சூழ்நிலையிலே ஏராளம் தப்பும்.

பிள்ளைகளின் விருப்பம் தெரிந்தும் அந்தஸ்து, பணம், இனம், மொழி, மதம் என்ற வரையறைகளால் தங்கள் விருப்பத்திற்கேற்ற துணையைத் தேர்ந்தெடுக்கும் போது - குடும்பத்திலே தாளம் தப்பி ஒலிக்க வாய்ப்பு உண்டு.

நிகழ்ச்சி

உயர்தர மாணவன் கணிதம் படிக்க முடியாமல் பாடசாலை செல்ல மறுத்துவிட்டான். அவன் கலைப்பிரிவு எடுத்துப் படிக்க விரும்பினான். ஐ.ஏ.எஸ். அதிகாரியாக அவனுக்கு விருப்பம். இறுதியில் பெற்றோர் விருப்பத்திற்காக என்ஜினியராக எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இன்னும் உயர்தரம் முடிக்கவில்லை.

- பிள்ளைகளோடு பேசித் தெளிவாக்கி முடிவு எடுக்க வேண்டும்
- பிள்ளைகள் எதிர்காலம்தான் முக்கியம். நமது ஆசைக் கனவுகள் அல்ல என்பதை பெற்றோர் உணர வேண்டும்.
- பிள்ளைகள் தவறும்போது உடன் இருந்து சூழ்நிலையை புரிய வைத்து தெளிவாக்க வேண்டும்.

# இளைஞனே விழித்தெழு

பட்டென்று தெறிக்கும் பார்வை முகங்களும்
சட்டென்று உடைந்திடாத உம் மனவுறுதியும்
வீசும் காற்றிலே தூசாய் எழுந்து விரைந்திடு
நீயும் கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு

கனவுகள் ஏராளம் கலையாத எதிர்காலம்
கடவுள் துணையிருக்க காலடி வைத்து
கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு

மானிட மகன் நமக்காக மரித்தார்
மகத்தான பாதையிலே நாம் சென்றிட
கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு

இளைஞர் ஆண்டு நமக்கெனப் பிறந்தது
இருளை அகற்றி ஒளியை ஏற்றிட
கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு

செ. ஜெசிந்டா
பட்டித்தோட்டம் – மன்னார்

# தரணி எங்கும் புகழ் சிறக்க!

எங்கிருந்து வந்தாரிவர்? எதற்காக வந்தார்?
என்பது நாட்களாய் என்னதான் செய்கின்றார்?
தங்களை அர்ப்பணித்து, தன்னலந்தான் துறந்து,
தாயின் பெயர் பூண்டு, தியாகம் பல புரிந்து,
மங்கா அறிவுடன், மாண்புடைய சேவையுடன்,
மகேசன் பக்கம் மக்களை ஈர்ந்தெடுக்க,
எங்களை மனம் மாற்றி, ஏற்றமுடன் நாம் வாழ,
"இயேசுவில் நாம் மீண்டும் எழுந்திட"
சங்கென நாம் துலங்கி, சாத்தானை விரட்டிட
தூங்காமல் உழைக்கும் இவர்க்கு நாம் செய்வதென்ன?
பங்கமில்லா இவர் பணி, பயனற்றுப் போகாமல்,
பரமன் வழி நாம் நடந்து பணியாளர் இவர்களுக்காய்ப்,
பொங்கும் நன்றியுடன், பொழுதும் எம் செபத்தில்,
பொற்புடன் நீடு வாழ்ந்து, பொறுப்புடன் பணியாற்ற,
தங்கத் தூய ஆவியார் தயை கிடைக்க வேண்டிடுவோம்.
தரணி எங்கும் இவர் புகழ் சிறக்க,
தாய் மரியும் உதவிடுவாள்!

R.A. நாயகி - குருநகர்.

# கவிதைச் சரம்

## அமைதி என்பது!

உத்தேசமில்லாமலேயே
அனைத்துச் சச்சரவுகளுக்கும்
தீவினைகளுக்கும் எதிராய் எரியும்
உக்கிரமான போரோ?
பயனிலா
வெளிப்பாடுகளனைத்தையும்
இடையறாது களைந்தபடி
உள்ளோடும்
அழுக்குகளனைத்தையும்
இமைக்காது
உற்றுநோக்கியபடி
ஆழ்ந்து அமர்ந்து நிற்கும்
அடங்கலரிய கொந்தளிப்போ?
எச் செயலாய் வெளிப்படுவதென
உட் தினறி
கூருணர்வாய்
அவதானித்தலாய்
அறியாமை கண்டு
வேதனிக்கும் நெஞ்சாய்
சாய்வு சமரசமற்ற
பேரறிவாய்
கருணையாய்
மெய்யன்பாய்
மெல்லக் கசிந்துருகும்
பேராற்றலின் களையோ?
கேளிக்கை
விளையாட்டு
வேடிக்கை
திருவிழாக்கள்
எதனாலும்
அணையாது நின்றெரியும்
நெருப்போ?
- தேவன் -

# "கொக்கு பிடிக்க வாங்க!"

மீ. ஜோயல்

"**கொ**ஞ்சம் வெண்ணெய் இருந்தால் கொடு! நான் கொக்கைப் பிடித்துக்கொண்டு வருகிறேன்" என்றான் ஒருவன்.

"அதெப்படி?" என்றான், கேட்டவன்.

"அதுவா! அது மிகவும் சுலபம். கொக்கு தூங்கும் போது பக்கத்தில் போய் அதன் தலையில் வெண்ணெயை வைத்துவிட்டு வந்துவிடுவேன். வெயில் ஏறும்போது வெண்ணெய் உருகிக் கொக்கின் கண்ணை மறைக்கும். அது ஓட முடியாது! அந்த நேரம் பார்த்து நான் போய் பிடித்துவிடுவேன்".

தலையில் வெண்ணெயை வைக்கிற அளவு பக்கத்தில் போனால் கழுத்தில் கைவைத்துப் பிடிக்க முடியாதா? இந்தக் கேள்வியைக் கேட்கத் தெரியாதவர்கள் நிறையவே இருந்தார்கள்!

அவர்கள் வெண்ணெய் தந்தார்கள். இவன் அதை நெய்யாகச் சாப்பிட்டான்!

இன்று நாட்டில் சோதிடம் சொல்லாத நாளிதழ், வார இதழ், தொலைக்காட்சி ஏதாவது இருக்கிறதா?

பகுத்தறிவைப் பரப்ப உண்மையில் முயலும் நிறுவனங்கள் கூடச் சோதிடத்தைத் தினமும் பரப்புகின்றன. ராசி பலன் கூறுகின்றன.

"ஏன் இப்படி மக்களின் அறியாமையைக் காசாக்குகிறீர்கள்?" என்று கேட்டுப் பாருங்கள்.

எல்லா ராசிகளுக்கும் நல்ல பலன்களைத் தான் சொல்கிறோம். எனவே எங்கள் ராசிபலன் மக்களின் உற்சாகத்தை வளர்க்கிறது. நம்பிக்கையை வளர்க்கிறது என்கிறார்கள்.


உங்களை நம்புங்கள்! ராசி பலன்களை நம்பாதீர்கள் என்று நேரடியாகச் சொல்ல வேண்டியதுதானே!

சுற்றி வளைத்து ராசி பலனைப் பயன்படுத்தித்தான் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டுமா?

கொக்கு தலைக்கு வெண்ணெயா?

வேறு யாருக்கு வெண்ணெய்?

**மூட நம்பிக்கைகளைப் பரப்புபவர்கள் நமக்கு நன்மை செய்கிறார்களா? அவர்களுக்கே இலாபம் தேடுகிறார்களா?**




**ஆசிரியர்:** ரவி, பத்து காட்டு விலங்குகளுடைய பெயரைச் சொல்லு?
**மாணவன்:** ஆறு புலி, நான்கு சிங்கம்.

**சுரேன்:** பேய், பிசாசுகள் உண்டென்று நம்புறீங்களா?
**சுகி:** முன்பெல்லாம் நம்பிக்கை இல்ல. என்னோட கல்யாணத்துக்கு அப்புறம் நம்பிக்கை வந்துச்சு!

**கோபு:** ஹோட்டல்ல வேலைசெய்தவரை கடையில வேலைக்கு வெச்சது தப்பாப் போச்சு!
**பாபு :** ஏன்...... என்ன பண்ணினார்?
**கோபு :** பூச்சி மருந்து வாங்க வந்தவர்கிட்ட சாப்பிடவா, பார்சலான்னு கேட்டிருக்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத
# அருட்தந்தை T.A.J. மதுரநாயகம் அடிகள்



**சுவாமியாரைச் சந்திக் கலாமா?**

கிளிநொச்சியில் இறங்கி உருத்திரபுரம் சென்று, பத்தாம் வாய்க்கால் "மாதா புரி" என்று போனால் ஒரு பரந்த வயல்வெளியின் நடுவில் "100 ஏக்கர் திட்டம்". அதில் ஒரு சிறிய வீடு வளவிற்குள்ளே புனித சூசையப்பர் சிற்றாலயம். அதற்கு அருகில் இரண்டு அறை கொண்ட சீற் போட்ட வீடு. அங்கு எளிமையான தோற்றத்துடன் கட்டைக் காற்சட்டை, பெனியன், செருப்பில்லாத காலோடு தலையில் தலைப்பாகை தோளில் சிறிய துவாய். சில வேளைகளில் கையில மண்வெட்டி, கத்தி இவை சகிதம் கயிறு. வேலி அடைத்துக் கொண்டும் வெற்றிலைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டும் நிற்பவர் இவர். ஓய்வு நேரத்தில் வாயில் ஒரு சுருட்டு அவரோடு அவர் வளர்க்கும் இளைஞர் ஒருவர் அல்லது இருவர் நிற்பார்கள்.

சுவாமியாரைச் சந்திக் கலாமா? "இவன்! யார் மோனே பார்" என்பார். பெரிய முகமலர்ச்சியுடன் "வாருங்கோ, வாருங்கோ... எப்படி இருக்கிறீங்க?" என்ற குரல் அவரது அடையாளமாகும்.

யாழ்ப்பாணத் திருச்சபையுள் பெரிய குருவாகவும், பல பெரிய பதவிகளில் சிறந்த கலவிமானாகவும் தலைமை தாங்கி வழிநடத்தியவரும், புனித மடுத்தீனார் குருமடத்தில் பல குருக்கள் உருவாக அத்திவாரம் இட்டவரும், குருக்கள் துறவிகளின் நண்பராக, ஆலோசகராக, வழிகாட்டியாக இருந்து நன்மதிப்பைப் பெற்றவருமான மூத்த குரு இவர்.

**ஆன்மீக வாஞ்சை**

தினமும் குறித்த நேரத்தில் துயில் எழுந்து தியானம், பூசைப்பலி, வேதாகம வாசிப்பு, திருச்செபமாலை சொல்லுதல் ஆகியவை அவரது நாளாந்தக் கடமைகளாகும். தேவதாயிடமும் புனித சூசையப்பரிடமும் விசேட பக்தி கொண்டவர். மரியன்னையின் ஆலயங்களைக் கட்டி சிறப்பிப்பதுடன் மக்களோடு சேர்ந்து செபித்து பாட்டுப்பாடி வழிபாடுகள் நடத்துவதில் நிறைவு கண்டவர்.

**கல்வி வளர்ச்சி**

இவர் கல்வியில் ஆர்வமுள்ளவர்களையும், கஷ்டப்பட்டவர்களையும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களையும் முன்னேற்ற தன்னாலான உதவிகளைச் செய்து சமுதாயத்திலே அவர்கள் நல்ல நிலைக்கு உயரச் செய்தவர். அவர் எங்கு சென்றாலும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவருக்கு கொடுக்கப்பட்ட தனி மரியாதையும் வரவேற்பும் இதற்கு சான்று பகர்கின்றன.

**சமூகத் தொண்டு**

"பசிக்குது என்று வருபவரை வெறுமையாக அனுப்பக் கூடாது" என்பது அவரது இலட்சியம். எனவே இமைத வேறுபாடின்றி, தேடிவந்த அனைவருக்கும உணவு, உடை, தொழில் வாய்ப்பு, வாழ்க்கையில் முன்னேற்றம் பெற வழி வகுத்து, உறவுடன் அரவணைத்து வாழ வைத்தவர். விவசாயத்தில் "நானும் செய்கிறேன், நீங்களும் செய்து பாருங்கள்" என்று உற்சாகம் ஊட்டி உழைத்து உண்ண வழி காட்டினார்.

**குருக்கள் துறவிகளுக்கு**

அவர்களை சந்திப்பதில் இவருக்கு பெருமகிழ்ச்சி. உடனே "சாப்பாடு போடுவோமா?" என்று சொல்லி தானே குசினிக்குள் நின்று சமைத்து, ருசி பார்த்து, விருந்தோம்பி மகிழ்ச்சி கண்டவர். தேவையான நேரத்தில் ஆலோசனை வழங்கி, திட்டம் தீட்டி, சோர்ந்து போகாமல் செயற்பட நீதி நேர்மையின்படி தேவையானவற்றைச் செய்வார்.

**நன்று நன்று**

இப்படி அவரைப் பற்றிப் பலவற்றைக் கூறலாம். அவரை உலகிலே எமக்குத் தந்து, எம்மோடு எமக்கு முன்னுதாரணமான குருவாக வாழ வைத்து, தம்மிடம் மீண்டும் அழைத்துக் கொண்ட அன்புத் தெய்வத்திற்கே மகிமையும் புகழும் உரித்தாகுக. அன்னாரும் தான் நிறைவேற்றிய திருப்பலி, தியாக வாழ்வுக்காகப் படைத்தவர் என்று கையில் நிறைவைக் கண்டு என்றும் மகிழ்ந்திருப்பாராக.

அருட்பணி. A.P.தேவசகாயம்


## 7ம் வருட நினைவஞ்சலி



இதயக் கோவிலில்
இன்பமாய் குடியிருக்கும்
இனிய தெய்வமே - அம்மா
ஏழு ஆண்டுகள் ஆனதம்மா
உனைப் பிரிந்து - ஆனாலும்
உன் அன்பின் புன்னகை

B4 F12 புளுமெண்டோல்
தொடர்மாடி, கொழும்பு.

**திருமதி. உபகார மீற்றா கொலின்ஸ் (ராணி)**

மண்ணில் 02.01.1940
விண்ணில் 02.08.2004

உன் கைப்பிடித்து
நாம் நடந்த காலங்கள்
நீ காட்டிய உலகின் அழகு
இன்னமும் பசுமையாய் உள்ளதம்மா
பாசக்கிளிகள் நாம்
இளைப்பாறிய ஆலமரமே
ஆண்டவனின் இளைப்பாற
அனுதினமும் வேண்டுகின்றோம்

திரு. வில்லியம் கொலின்ஸ்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## விண்ணக வாழ்வில் 3ம் ஆண்டு நிறைவு

அன்னை மடியில்
06-111983

இறைவன் மடியில்
02-06-2008



**அமரர் பீற்றர் நிரஞ்சன்**


கடல் தாண்டி நீ சென்று பிரிந்தாலும்
கரையுதடா எம் இதயம் கனங்
கனம் உன்னால் - இன்று
கரங்கள் துடிக்குமடா உன்னை
கொன்றவனை - எண்ணி
ஆண்டுகள் சென்றதடா மூன்று - உன்
நினைவென்னும் நெருப்பில்
மூண்டு நாம் - கிடக்கின்றோம்
நீ வரமாட்டாய் எனத் தெரிந்தும்
ஒரு - நம்பானை
பக்கத்து வாப்பக்கம் போனாய்
பத்திரமாய்
நாளை வருவாய் எம் வீடு
என்று - உன்னை
படைத்தவன் வீடு சென்றாயோ
உனது ஆன்மா இறை
சன்னிதியில் என்றுமே
கலந்து இருக்க தினமும்
பிரார்த்திக்கிறோம்.
குடும்பத்தினர்

இல. 1, பற்றிக்ஸ் றோட்
யாழ்ப்பாணம்.

Add 57/11

## விண்ணக வாழ்வில்....
## 06ம் ஆண்டு நிறைவு

"சீவியத்தில் நேசித்தவர்களே!
மரணத்திலும் மறவாதீர்கள்"



அன்னையின் மடியில்
1957-10-24

ஆண்டவன் கரத்தில்
2005-08-10

பாலச் சந்திரா அனிஸ்ரன்
குலவிறோ [கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்க முன்னாள் சாரதி, பரந்தன்]

ஆறாண்டுகள் கடந்தபோதும்
ஆறுதல்தான் அடையவில்லை - உங்கள்
அன்பு மொழியும் அரவணைத்த கரங்களும்
அனைவரது மனதில் என்றும் வாழுமே - உம்
ஆன்மா வாழ்விற்கு உரமிட்ட உங்கள்
ஆன்மா சாந்தி அடைய நாம் வேண்டுகின்றோம்.

489/10 யுனிற்
கருமபுரம்.

Add-58/11

பாசமிகு
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேத்தி


## திருத்தந்தை அவர்களின் ஆண்டவரின் .. (3ம் பக்கத் தொடர்ச்சி)

பித்தலை தூண்டுவதாகவும் அமைய வேண்டும். தங்கள் வாழ்வில் விவிலியத்திற்குப் பொருள் விளக்கம் தந்த புனிதர்களுடைய வாழ்வு இறைவார்த்தை அனுபவத்திற்கு முன்னோடியாகத் திகழ வேண்டும்.

**II. திருச்சபையில் இறைவார்த்தை (Verbum in Ecclesia).**

திருச்சபையானது இறைவார்த்தையைப் பெற்று அதனை பேணிப் பாதுகாத்து இறை மக்களுக்கு அதன் மூலம் வலுவூட்ட வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளது. இறை வார்த்தையை திறந்த மனதோடு உள்வாங்குவதன் மூலம் திருச்சபை என்றும் கடவுளின் குழந்தையாக இருக்கின்றது *(மத் 28:20)*. தூய ஆவியினால் திருச்சபை வழியாக உலகிற்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. திருச்சபை தன் வாழ்விற்கான ஆதாரத்தை தன்னிடமிருந்தல்ல, நற்செய்தியிலிருந்தே பெற்று தன் இலக்கு நோக்கி இறைவார்த்தையின் ஒளியில் வழி நடத்தப்படுகின்றது. இறை வார்த்தையை திருக்கூட்டமாக கேட்க, தியானிக்க, சிறந்த தளமாக அமைவது திருவழிபாடாகும். அருளடையாள கொண்டாட்டங்கள், இறைவார்த்தை முழக்கம், திருப்புகழ்மாலை இறைவார்த்தையில் வேரூன்ற உதவிபுரிகின்றன. இறைவார்த்தையின் ஆற்றலினால் இறைமக்கள் புனிதமடைய இறைவனின் மீட்பின் கருவியாக இவை செயற்படுகின்றன.

திருச்சபையின் வாழ்வில் இறைவார்த்தை முதன்மை பெறுதல் அவசியமாகும். இறைவார்த்தையினால் தூண்டப்பட்டு கிறிஸ்துவை அனுபவிக்க இறைபணியாளர்கள் இறைமக்களை ஊக்கப்படுத்த வேண்டும். குறிப்பாக மறைக்கல்வியில் இறைவார்த்தையை முதன்மைப்படுத்தவும், விவிலிய பயிற்சியை பொதுநிலையினருக்கு வழங்கவும் ஆவன செய்யப்பட வேண்டும். திருச்சபையின் அனைத்து நிலையினரும் இறை வார்த்தையோடு உறவு கொண்டு வாழவும் தூண்டுதல் அளிக்கப்பட வேண்டும். அருட்பணியாளர்கள் முதலில் தாங்கள் நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்கள் என்பதை உணர வேண்டும். குடும்பத்தில் இறைவார்த்தை பகிரப்பட்டு, உன்னார்ந்த ஆர்வத்தோடு ஈடுபட்டு பெற்றோர்கள் குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும்.

**III. உலகிற்கு இறைவார்த்தை (Verbum Mundo)**

இறைவார்த்தை உலகிற்கு அறிவிக்கப்பட வேண்டுமென்பது இயேசு கிறிஸ்துவின் பேரம்பேச முடியாத பணிப்புரையாகும். காலத்தின் குறிகளையும், சவால்களையும், நிகழ்வுகளையும் உள்வாங்கி காலமாற்றத்திற்கேற்ப நற்செய்தியை அறிவிக்க வேண்டுமென்பதில் முரண்பாடு கருத்து இருக்க முடியாது. இயேசுவின் வார்த்தை இறைவனின் வெளிப்பாட்டிற்கு செவிமடுப்பதாக மட்டுமல்லாது, அதற்குத் தூதுவர்களாகவும் மாற அழைக்கின்றது. திருச்சபை தனக்குரிய இருப்பின் அடித்தளத்தில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டே ஆக வேண்டும். இறைமக்கள் தாம் பெற்றுக்கொண்ட திருமுழுக்கு அழைப்பால் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டு மாண்புரிமையை நிலை நாட்டுவதில் ஒருமைப்பாட்டைப் பேண வேண்டும் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட அன்பின் நிறைவில் இது அமைந்துள்ளது என்பது வலியுறுத்தப்படுகின்றது.

மானிட வாழ்வை வளர்த்தெடுக்கும் கலாசார மதிப்பீடுகள் விவிலியத்தின் அடிப்படையில் இடம்பெற வேண்டும். கலாசாரத்தின் பிரதிபலிப்புக்களாக திகழும் கலைக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள், சமூகக் கலைத் தொடர்பு ஊடகங்கள் அனைத்திற்கும் விவிலியமே வழிகாட்டுதலைக் கொடுக்க வேண்டும். "வார்த்தையானவர் மனுவான" மாபெரும் நிகழ்வு கலாசாரங்களை நற்செய்தியின் இயல்பிற்கு ஏற்ப மாற்றுவதும், விவிலியத்தை பண்பாட்டு மயமாக்குதலுக்கு இட்டுச் செல்லவும் வேண்டும். இறைவார்த்தை அறிவித்தல் என்பது நேரடி சந்திப்பிலும் உரையாடலிலும் நல்உள்ளம் கொண்ட மக்களுடன் இணைந்து செயல்படுவதிலும் அமைந்துள்ளது. பிற சமய உரையாடல்கள் மதச் சுதந்திரத்தின் அடிப்படையில் நடைபெற வேண்டும். பல்வேறு மதநம்பிக்கை கொண்டவர்களுடன் இணைந்து செயற்படுவதிலும் மானிட விருத்திக்கும் நல்வாழ்விற்கும் பங்களிப்புச் செய்ய முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். திருத்தந்தையின் அறிவுரை மடலானது கிறிஸ்தவ வாழ்விற்கு அடிப்படையாக இருக்க வேண்டிய இறைவார்த்தையில் ஊன்றிய ஆன்மீகத்தை வலியுறுத்துகின்றது. இவ் இறைவார்த்தை "புதிய நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு" அழைப்பு விடுக்கின்றது. இவ்வாறு புதிதாக அறிவிக்கப்படும் நற்செய்தியானது பலரின் வாழ்வில் மகிழ்ச்சியை கொண்டு வருகின்றது. அதேவேளையில் இன்றைய காலகட்டத்தில் ஏற்கனவே நற்செய்தியை ஏற்ற நம்பிக்கை வாழ்வுடையோருக்கும் மீள் நற்செய்தி அறிவிப்புப் பணியும் தேவைப்படுகின்றது. இதுவே திருச்சபைக்குள்ளே வாழும் இறைமக்களைப் புதுப்பித்து வழிநடத்த அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டி

## சென் பற்றிக்ஸ் கல்லூரி மூன்றாம் இடம்



சீனிகமவில் அமைந்துள்ள நல்லுறவிற்கான நிறுவனம் நடத்திய சர்வதேச பாடசாலைகள் பங்கு பற்றிய முரளி வெற்றிக்கிண்ண கிறிகெட் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது.


இப் போட்டியில் இங்கிலாந்தின் மூன்று கல்லூரி அணிகளும் மலேசியா அணியும் சிங்கப்பூர் அணியும் இலங்கையை சேர்ந்த மூன்று அணிகளுமாக மொத்தமாக எட்டு அணிகள் இப்போட்டியில் பங்கு பற்றின.

இலங்கை கிறிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககாரவின் விசேட அழைப்பின் பேரில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி இப் போட்டியில் பங்கு பற்றியது.

சென் பற்றிக்ஸ் கல்லூரி இங்கிலாந்து கல்லூரிகளான வார்விக் கல்லூரி, வுலக்ஸகாம் கல்லூரி, மலேசியா கோலாலம்பூர் அணி ஆகியவற்றினை வெற்றி கொண்டு மூன்றாம் இடத்தினை பெற்றது.

சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல துறைகளிலும் பிரகாசித்து பலரது பாராட்டையும் பெற்றதோடு சிறந்த வீரர்களுக்கான பரிசில்களையும் சென் பற்றிக்ஸ் வீரர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

# அருட்பணி மதுரநாயகம் அடிகளாரின் ஓராண்டு நினைவு திருப்பலி



அருட்பணி. மதுரநாயகம் அடிகளாரின் மறைவின் முதலாவது ஆண்டு நினைவு திருப்பலி அவர் முப்பது வருடங்களிற்கு மேல் வாழ்ந்து, பணி புரிந்த வன்னி மண்ணிலே நிறைவு கூரப்பட்டது.

தூய பற்றிமா ஆலயத்தில் நடைபெற்ற இத்திருப்பலியில் குருக்கள், துறவிகள், அடிகளாரை நன்கு அறிந்தவர்கள், பங்குமக்கள், மாணவ - மாணவிகள் பங்குபற்றினர். இவ் இரங்கல் பலியை அருட்பணி. மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலியின் நிறைவில் மறைமாவட்டதின் மூத்த குருவாக வாழ்ந்து மறைந்த மதுரநாயகம் அடிகளார் பற்றிய கவிதைக் குறிப்புக்கள் வாசிக்கப்பட்டன.

# மறையாசிரியர் சிறப்புப் பரீட்சைக்கான புதிய கை நூல் வெளிவந்து விட்டது

சிறப்பு பரீட்சைக்குத் தோற்றவுள்ள மறையாசிரியர்களுக்கான

புதிய பாடக் கை நூல் வெளிவந்து விட்டது. இப்பாட நூலிலே. முன்னர் உள்ள மறையாசிரியர் சிறப்புப் பரீட்சை நூலில் இல்லாததும். இப் பரீட்சைக்கான பாடத் திட்டத்திலே அடங்குவதுமான பாடங்கள் தெளிவாக, விளக்கமாக தரப்பட்டிருப்பதோடு, இருந்த பாடங்கள் திருத்தியமைக்கப்பட்டும் உள்ளன.


இவ் வருடம் கார்த்திகை மாதம் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள மறையாசிரியர் பரீட்சைக் கை நூலை கற்று பயன் பெறவே இக் கை நூல் வெளியிட்டுள்ளதாக தேசிய மறைக்கல்வி நடுநிலைய தமிழப் பிரிவுப் பொறுப்பாளர் அருட்சகோதரி ரஞ்சி பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.

# அன்பிய பணிக்குழுவின் தேசிய ஒன்றுகூடல்

வெவ்வேறு மறைமாவட்டங்களின் அன்பியல் பணியாளர்கள் தேசிய ரீதியில் ஒன்றுகூடும் இவ்வாண்டுக்கான இரண்டாவது ஒன்று கூடல் இம்மாதம் 27ம் 28ம் திகதிகளில் குருநாகல் மறைமாவட்டத்தில் குளியாப்பிட்டிய பங்கில் இடம்பெற் றது. இவ்வொன்று கூடலுக்கு எமது மறைமாவட்டத்திலிருந்து அன்பிய இயக்குனர் அருட் பணி. இரவிச்சந்திரன் அடிகளாரோடு செல்வன் றுகுணன் செல்விகள் துஸ்யந்தினி, குமுதினி ஆகியோர் பங்குபற்றினர்.

குருநாகல் மறைமாவட்ட அன்பியங்கள் தரிசிப்பு, மறைமாவட்டங்களின் அன்பிய செயற்பாடுகள் பகிர்வு, அடுத்தாண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய அன்பிய மாநாட்டிற்கான ஆயத்தங்கள என பல்வேறு விடயங்கள் நடைபெற்றன.

# குருத்துவ வாழ்வில் ௬0 ஆண்டுகள்



அருட்தந்தை ஜெரேமியா சைமன் அரசரெட்ணம் அவர்கள் குருத்துவ வாழ்வில் அறுபது ஆண்டுகளை நிறைவு செய்கிறார். யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அடிகளார் 1951ம் ஆண்ட ஜுன் மாதம் 29ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தமிழ்நாடு தூத்துக்குடி மறைமாவட்டத்தில் 1968ம் ஆண்டு வரை பணிபுரிந்த அடிகளார் அதன்பின் இலங்கை வந்து திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் இணைந்து பல்வேறு பங்குகளில் பணிபுரிந்துள்ளார்.

# பத்திரிகையியல் பயிறசி கருத்தமர்வு

பத்திரிகையியலில் ஆர்வம் கொண்டோருக்கும், பாதுகாவலன் பத்திரிகையின் பங்கு செய்தியாளர்களாக பணிபுரிவோர், பணியாற்ற விரும்பும் புதியவர்களுக்குமான ஓர் நாள் பயிற்சிக் கருத்தமர்வு எதிர்வரும் ஆவணி 20ம் திகதி (சனிக்கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தமர்வினை தோழன் பத்திரிகை ஆசிரியர் தலைமை தாங்கி நடத்தவுள்ளார். இக் கருத்தமர்வில் யாழ் குடாநாட்டு செய்தித்தாள் ஆசிரியர்களும், ஊடகவியலாளர்களும் பயிற்சி வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பங்குபற்ற விரும்புபவர்கள் உடன் பாதுகாவலன் ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.

# விவிலிய அப்போஸ்தலத்துவ கருத்தரங்கு

எதிர்வரும் ஆவணி 22ம் திகதி முதல் புரட்டாதி 4ம் திகதி வரை விவிலிய அப்போஸ்தலத்துவ கருத்தரங்குகள் யாழ் மறைமாவட்டத்தில் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது. "இறைவார்த்தையில் - வாழ்வும் பணியும்" எனும் தலைப்பிலான இக்கருத்தரங்கை தமிழ் நாடு "தோழன்" சஞ்சிகை ஆசிரியர் அருட்பணி R. மரிய டெய்லஸ் அடிகள் நெறிப்படுத்துவார். பொதுநிலையினருக்கான இக்கருத்தமர்வு அவர்களின் வாழ்விலும் பணியிலும் இறைவார்த்தையின் முக்கியத்துவத்தை உணர வைக்கும்.

"ஆண்டவரின் அருள் வாக்கு" என்னும் திருத்தூது அறிவுரை மடலின் விளக்கக் கருத்தரங்கு ஒன்றும் "தோழன்" சஞ்சிகை ஆசியரால் குருக்கள் துறவிகளுக்கும் நடத்தப்படவுள்ளதாக இக் கருத்தமாவின் ஏற்பாட்டாளர்களாகிய அருட்பணியாளர்கள். ஜோர்ஜ், இரவிச்சந்திரன் பாதுகாவலனுக்கு தெரிவித்தனர்.

# வளனார் குரு மடத்திற்கு புதிய அதிபர்

கொழும்புத்துறை தூய வளனார் அமல மரித்தியாகிகள குருமடத்தின் புதிய அதிபராக அருட்பணி. செ. அன்புராசா அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். அருட்தந்தை அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக பிரான்ஸ் லூர்த்து அன்னை திருத்தலத்தில் தமிழ் மக்களின் ஆன்மீக குருவாக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிடத்தக்கது. அமல மரித்தியாகிகளின் 35க்கு மேற்பட்ட குருக்களின் வழிநடத்தலில் 80 நாட்களுக்கு மேலாக பங்கின் மகா ஞான ஒடுக்கம் நடைபெற்று பல் வேறு நிலைகளில் பங்கு மக்கள் ஆன்மீக புதுப்பித்தல் கண்டு விழா கொண்டாடினர். இவ் முன்னாயத்த செயற்பாடுகளையும், விழா ஒழுங்குகளைப் பங்குத்தந்தை அருட்பணி. R.X. நேசராஜா அடிகள் உதவிக் குரு அருட்பணி. எல்மோ அடிகளுடன் இணைந்து மேற் கொண்டிருந்தார்.

## சர்வதேச பௌதிகவியல் ஒலிம் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேல் நாட்டில் 2011 மே மாதம் நடைபெற்ற இந்த 12வது ஆசிய பௌதிகவியல் ஒலிம்பியாட்டில் கௌரவக் குறிப்புச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு இலங்கையர் இவராவார். இதில் 14 ஆசிய நாடுகள் பங்குபற்றின.

தொடர்ந்து தாய்லாந்தில் நடந்த 42வது சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட்டில் பங்கு பற்றிய ஐவர் கொண்ட இலங்கைக் குழுவிலும் இடம்பெற்ற இவர், இப்போட்டியில் வெள்ளிப் பதககம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையைப் பெறுகிறார். மேலும் இக்குழுவைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் வெண்கலப் பதக்கங்களையும், ஒருவர் கௌரவக் குறிப்புச் சான்றிதழையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்பீடமும் மலேசியாவும்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினர் புத்த மதத்தினர். 9.1 விகிதத்தினர் கிறிஸ்தவர்கள். 6.3 விகிதத்தினர் இந்துக்கள். 2.6 விகிதத்தினர் சீனப் பாரம்பரிய மதத்தினர். 2.4 விகிதத்தினா இயற்கையை வழிபடுபவர்கள்.

தென்கிழக்கு ஆசிய நாடாகிய மலேசியாவில் 1511ம் ஆண்டில் கத்தோலிகக்த் திருச்சபை வேரூன்றத் தொடங்கியது. இந்நாட்டின் மலாக்காவில் முதல் போர்த்துக்கீசிய மறைப்பணியாளர்கள் தங்கள் பணியைத் தொடங்கினர். 1545ல் தூய பிரான்சிஸ் சவேரியார் மலாக்கா சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்சமயம் மலேசியாவில் 11 ஆயர்கள், 274 மறை மாவட்ட குருக்கள், 119 துறவறக் குருக்கள், 123 அருட்சகோதரர்கள், . 759 அருட்சகோதரிகள் மற்றும் 8,50,720 கத்தோலிக்கர் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2011 [illegible]